பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 01 2026 FRIDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. புத்த பிரானின் சிந்தனைகளை மக்களிடம் பிரபலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதாரச் சட்டம் குறித்து திமுக-வினர் தவறான தகவல்களை பரப்பி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
3. நாட்டின் சீர்திருத்த பயணத்தை, தொழில்நுட்பம் வழிநடத்திச் செல்வதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

4. 500 ரூபாய் நோட்டுக்களை, ரிசர்வ் வங்கி திரும்பப்பெற போவதாக வெளியான தகவல் உண்மைக்கு புறம்பானது என்று மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.
5. அகமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>>

புத்த பிரானின் சிந்தனைகளை மக்களிடம் பிரபலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புத்தரின் Piprahwa புனித கலசத்தை சர்வதேச அரங்கில் பார்வைக்கு வைக்கும் நிகழ்ச்சியை நாளை, தாம் தொடங்கி வைக்கவுள்ள நிலையில், சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள பிரதமர், நாட்டின் வளமான கலாச்சாரத்தை இளைஞர்கள் அறிந்து கொள்வதற்கு இந்த முயற்சி உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

புதுதில்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்திலும், கொல்கத்தாவில் உள்ள இந்திய அருங்காட்சியத்திலும் Piprahwa-விலிருந்து கண்டெடுக்கப்பட்ட புத்தரின் வாழ்க்கை மற்றும் சிந்தனைகளை விளக்கும் அரிய தொல்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதையும் பிரதமர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டம் குறித்து தமிழகத்தில், திமுக-வினர் தவறான தகவல்களை பரப்பி

வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சென்னையில் மத்திய அரசின் நடப்பாண்டிற்கான நாள்காட்டியை வெளியிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்திற்கான பயனாளிகள் கிராமசபை உறுப்பினர்கள் மூலம் வெளிப்படைத் தன்மையுடன் தெரிவு செய்யப்படுவதாக கூறினார்.

முன்பு 100 நாட்களாக இருந்த இந்த திட்டத்தில், தற்போது 125 வேலை நாட்கள் ஒவ்வொரு பயனாளிக்கும் அளிக்கப்படுவதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

*(Sound Byte – எல். முருகன் 45 Sec.)*

<<<<<<<>>>>>>

நாட்டின் சீர்திருத்த பயணத்தை, தொழில்நுட்பம் வழிநடத்திச் செல்வதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

தமது அமைச்சகத்தின் கடந்த ஆண்டின் சாதனைகளை பட்டியலிட்டுள்ள அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, கடந்த 2014ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் அறிவியல்

மற்றும் தொழில்நுட்பத்திற்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

தொழில்நுட்பமும், புதிய கண்டுபிடிப்புகளும் நாட்டின் எதிர்கால வளர்ச்சியை நிர்ணயிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் முதல்முறையாக அறிவியல் தொழில்நுட்பத்துறையை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஊக்குவித்துள்ளது என்றும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்கெட்டுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. கவ்ரவ் பாட்டியா, மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி, ஊடுருவல்காரர்களிடம் மென்மையான போக்கை கடைபிடிப்பதாகவும், மக்களிடையே போலியான வாக்குறுதிகளை அளித்து அரசியல் செய்வதாகவும் குற்றம் சாட்டினார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், சட்டபூர்வமானது என்றும், அதனை செல்வி. மம்தா பானர்ஜி எதிர்ப்பதாகவும் திரு. கவ்ரவ் பாட்டியா குறை கூறினார்.

<<<<<<<◇>>>>>>

இனி, மத்திய அரசு கடந்த ஆண்டு படைத்த சாதனைகள் குறித்த தொகுப்பு.

**(Opening Tune – 20 Sec.)**

இதில் இன்று இடம்பெறுகிறது, தொழில்நுட்பத்துறை சாதனைகள்.

**(Sound Byte – 130 Sec.)**

<<<<<<<◇>>>>>>

தனிநபர் மின்னணு பரிவர்த்தனைகள், ஆன்லைன் நடவடிக்கைகள் மற்றும் அன்றாட வாழ்க்கையை, வருமானவரித் துறை கண்காணித்து நடவடிக்கை எடுப்பதாக கூறப்படும் சமூகவலைதள பதிவை மத்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

பத்திரிகை தகவல் அலுவலகம் வெளியிட்டுள்ள தகவலில், வருமான வரித் துறையினர், தனிநபர் கண்காணிப்புக்கான எந்தவொரு கட்டமைப்பையும் வைத்திக்கவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளது.

சமூகவலைதளத்தில் வெளியான தகவல் முற்றிலும் தவறானது என்றும், மக்களை திசை திரும்பும்வகையில் உள்ளது என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

இதுபோன்று சமூகவலைதளங்களில் வெளியாகும் தகவல்கள் குறித்து மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும், சரியான தகவல்களை சரிபார்த்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று, இந்திய ரிசர்வ் வங்கி, 500 ரூபாய் நோட்டுக்களை, வரும் மார்ச் மாதம் புழக்கத்திலிருந்து நிறுத்தப்போவதாக வெளியான தகவலும் உண்மைக்குப் புறம்பானது என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியும், சமூகவலைதளத்தில் வெளியிடப்பட்ட இந்த தகவல் போலியானது என்றும் இதுபோன்ற எந்தவொரு அறிவிப்பும் ரிசர்வ் வங்கி சார்பில் வெளியாகவில்லை என்றும் உறுதி செய்துள்ளது.

500 ரூபாய் நோட்டுக்கள் சட்டபூர்வமாக செல்லத்தக்கவை என்றும் ரிசர்வ் வங்கி உறுதி செய்துள்ளது.

<<<<<<>>>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

**அகமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.**

**ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ஜப்பானின் Honoka Kobayashi -ஐ வென்றார்.**

-------------------

**இந்திய மகளிர் ஹாக்கி அணியின் முதன்மை பயிற்சியாளராக Sjoerd Marijne நியமிக்கப்பட்டுள்ளார்.**

**டோக்கியோ ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் இந்திய மகளிர் அணி நான்காவது இடத்தை பிடித்ததற்கு காரணமானவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.**

-------------------

**நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணியை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் நாளை இணையதளம் வாயிலாக நடைபெறும் என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.**

**<<<<<<<END>>>>>>**